# கிருபையுள்ள வார்த்தை®

GRACIOUS WORD Luke 4:22

Vol - 14 November நவம்பர் 2013

ஆண்டு சந்தா ரூ. 100/- தனிப் பிரதி ரூ. 8/- வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




**என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.**

பிலி 4 : 19


கௌரவ ஆசிரியர் Betty Choate ஆசிரியர் PCPR

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...

பிணக்குகளை... 3
கிறிஸ்தவராக மட்டும் 10
அன்புக்கு பாத்திரமான... 13
எல்லாரும் குணமாக்கும்... 17
மோசேயின் சாக்குபோக்கு... 25
உங்கள் வாழ்க்கையில்... 26


*In memory of*
**J.C. CHOATE**


ஆசிரியர் குழு

*Guest Editors :* **BETTY CHOATE**
**JERRY & PAULA BATES**

**Editor : PCPR**

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,
**C. சியாமிலன் கார்த்திக்,** B.Sc.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
சட்ட ஆலோசகர் : **M. முனி** B.A.,B.L.

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi,
Madurai 625 016. India


**கிருபையுள்ள வார்த்தை**
**"சமாதானம் ஓதும் சமரச வார்த்தை"**

# கிருபையுள்ள வார்த்தை
# TV நிகழ்ச்சிகள்




**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை - 6.45
வெள்ளி காலை - 6.00

**Holy Cross T.V.**
(புதுச்சேரி)

ஞாயிறு காலை - 6.30

**King of Glory T.V.**
(திருநெல்வேலி)

ஞாயிறு காலை - 6.00


செய்தியாளர் :
போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)




நமது ஆசிரியரின் அமெரிக்க தேச ஊழியப் பயணத்தின் போது, அங்குள்ள சிறைச்சாலையில் (JAIL) திருமுழுக்குப் பெற்ற நண்பர்கள்.



அன்பு சகோதர, சகோதரிகளே !

இந்த ஆண்டின் இறுதியில், தேவன் நமக்கு செய்த நன்மைகட்கு நன்றி சொல்லும் விதமாகவும், கிறிஸ்துவின் அன்பை நம் மூலம் வெளிப்படுத்தவும், ஏழை பார்வையற்ற அன்பர்களுக்கு புத்தாடையும், அரிசியும் கொடுத்து உதவுவோம் ! (2 கொரி 9:8,9)

## Gospel Through Media by World Evangelism Team

- **Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :**
  Every Sunday 6.45 - 7.00 a.m and Every Friday 6-00 a.m . - 6-30 a.m.
  (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)***
- **Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV**
  Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m.
  and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382
- **Arjunan in Tamil on Tamilan TV & Radio :**
  TV : Every Monday 6.00 - 6.15 a.m. and Every Saturday 6.15 - 6.30 p.m.
  Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio.
  (TAMILNADU Contact Mobile : 94435 58041)
- **Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :**
  Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m.
  **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m.
  (ANDRAPRADESH Contact Phone : 098423 63722)
- **P.R. Swamy & Douglas in Tamil on Radio :**
  Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)
- **P.K. Varghese in Malayalam on JaiHind TV**
  Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.
  (KERALA Contact Mobile : 94470 35465)
- **Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :**
  Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.
  (NEW DELHI Contact Mobile : 098108 96789)

## ஜெபியுங்கள்

- நவம்பர் 10,11 தேதிகளில் குன்னூரில் நடைபெறும் சுவிசேஷ பயிற்சி பள்ளி வகுப்புகளுக்காக...
- நவம்பர் 13 முதல் 16 வரை ஒரிசாவில் நடைபெறும் J.C.School of Evangelism வகுப்புகள் மற்றும் புயலால் பாதிக்கப்பட்டவர்களை சந்திக்கும் நிகழ்ச்சிக்காக...
- நம்முடைய ஆசிரியரின் அமெரிக்க தேச பயணத்தில் தேவன் உடனிருந்ததற்காக...

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819

Registered News Paper No. : TNTAM/2001/14161
Postal Registration No. : MA/07/2012-2014
Posted at Arasaradi HPO on 10th, 11th November 2013

**ஒரிசாவை தாக்கிய ஃபாலின் புயலினால் பாதிக்கப்பட்ட பெர்ஹாம்பூர் மற்றும் கோபால்பூரை சேர்ந்த நம்முடைய சுவிசேஷ பள்ளி மாணவர்கள் மற்றும் விசுவாசிகளின் குடும்பங்களுக்காக ஜெபியுங்கள்! இந்த கடினமான நேரத்தில் நம்முடைய கிறிஸ்தவ அன்பை வெளிப்படுத்துவோம்.**



***If undelivered please return to :***

**EDITOR**
**KIRUBAIYULLA VARTHAI**
45 C/1, Church Lane,
Coronation Street,
Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421
92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online

# பிணக்குகளை சரிசெய்தல்



**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

அருமையான கிருபையுள்ள வார்த்தை வாசகர்களே! உங்கள் யாவரையும் சமாதான பிரபு ஆண்டவர் இயேசுவின் பெயராலே “உங்களுக்கு சமாதானம்” என்று வாழ்த்துவதிலே மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அன்பானவர்களே! இந்த மாதம் ஒரு மிக முக்கியமான காரியத்தை குறித்து நாம் தியானிக்க போகிறோம். திருமண வாழ்க்கையில் தம்பதியினரிடையே எழும் கருத்து வேறுபாடுகள் அல்லது பூசல்கள் குறித்தும், அதனை வசனத்தின் துணை கொண்டு சரி செய்வதை குறித்தும் படிக்க நம் மனதினை ஆயத்தப்படுத்துவோம்.

ஒருவேளை நீங்கள் இவ்வாறாக எண்ணலாம் கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு என்பது சகஜமான ஒன்றுதானே என்று; உண்மை தான், ஆனால் சமீபகால தகவல்களும், புள்ளிவிவரங்களும் நம்மை பிரமிக்கவும், கலங்கவும் செய்கின்றன. விவாகரத்து திருமணத்தினை விட சாதரணமாகவும், மிக வேகமாகவும் நடக்கின்றன. விவாகரத்து கோருவோரில் மெத்த படித்த மேதாவிகளே அதிகம். அதிலும் கிறிஸ்தவ வாலிப பிள்ளைகள் அதிகமாக இருக்கிறார்கள் என்ற தகவல் என்னை மிகவும் கலங்கச் செய்தது.

சமாதானத்தின் தேவனுடைய பிள்ளைகள் இவ்வாறு இருப்பது எவ்வளவு வேதனைக்குரியது. இதனை கேள்விபட்ட தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் கலக்கமடைவதும், தேவடைய சமூகத்தில் கண்ணீரோடே விண்ணப்பம் செய்வதும் இயல்புதானே. அதே வேளையில் சத்துருவானவனின் இந்த குழப்பம் தனை கையாள வேண்டியது அவசியமான ஒன்றல்லவா!

ஆகையால், புதிதாக திருமணமானவர்களோ அல்லது திருமணமாகி மனக்கசப்புடனே வாழ்ந்துக்கொண்டிருக்கின்ற உங்கள் அனைவருக்கும் இந்த தியானமானது மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்று நான் கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். ஏனெனில், தேவனுடைய வார்த்தை நம் சிந்தனைக்கு எட்டாத அளவு வல்லமையுள்ளது (எபி 4:12; ஏசா 55:9–10; யோவா 8:32).

## I. **பிணக்குகள் அல்லது பூசல்கள் வர காரணங்கள்.**

அன்பானவர்களே! திருமண வாழ்க்கையில் கருத்து வேறுபாடுகள் அல்லது பூசல்கள் வருவதற்கு காரணங்கள் அநேகம் உண்டு. சில குறிப்புகளை நாம் படித்து அறிந்துகொள்வோம்.

### 1. பின்னணியில் வேறுபாடு

இரண்டு நபர்கள் குடும்ப வாழ்வில் ஒன்று சேரும்போது, இருவரும் இருவகையான கலாச்சாரத்தை, அதாவது, குடும்ப பழக்கவழக்க முடையவர்கள் என்பதை நன்கு அறிய வேண்டும். இருவருமே வித்தியாசமான காரியங்களை செய்யும் வித்தியாசமான குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் என்பதை உணர வேண்டும். ஒருவர் நகர வாழ்க்கை (City Life) பின்னணியில் இருந்து வந்தவராகவும், மற்றவர் கிராம வாழ்க்கை பின்னணியினை கொண்டவராகவோ இருக்கலாம். ஒருவர் படித்தவராகவோ மற்றவர் குறைவாக படித்தவராகவோ அல்லது படிக்காதவராகவோ இருக்கலாம்.



ஒருவர் குறையை மற்றவர்
பரியாசம் செய்வதோ, மதிப்பு
குறைவாக நடத்துவதோ,
அவமானமடைய
செய்வதோ தேவனுடைய பார்வையில்
மகா பயங்கரமான பெருமையின்
பாவமாக இருக்கிறது.

ஒருவர் சத்தமாக பாடல் கேட்பதை விரும்புவராக மற்றவர் அமைதியை விரும்புவராக இருக்கலாம். இது போன்ற அநேக பின்னணி வேறுபாடுகள் இருக்கலாம். இதனை ஒருவருக்கொருவர் நன்கு புரிதல் அவசியம். ஒருவர் குறையை மற்றவர் பரியாசம் செய்வதோ, மதிப்பு குறைவாக நடத்துவதோ அல்லது அதனை பெரிதாக்கி அவமானடைய செய்வதோ தேவனுடைய பார்வையில் மகா பயங்கரமான பெருமையின் பாவமாக இருக்கிறது. பிலி 2:3, “ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்”. மேலும், எல்லாம் வல்ல ஆண்டவர் அடிமையின் ரூபமெடுத்து தன்னை தாழ்த்தினதை நினைவில் கொள்வோம். (பிலி 2:4-8).

### 2. தன்மையில் வேறுபாடு

இரண்டு நபர்கள் குடும்ப வாழ்க்கையில் ஒன்று சேரும்போது, இருவரும் தங்களது தனிதன்மையில் (சுபாவங்களில்) வேறுபட்டிருக்காலம். ஒருவர் யாவரிடமும் சகஜமாக பழகுபவராகவும், மற்றவர் கூச்ச

சுபாவமுடையவராகவும் இருக்கலாம். ஒருவர் சுத்தத்தை விரும்பி வீட்டை எப்பவும் சுத்தமாக வைத்திருப்பராகவும், மற்றவர் வீட்டில் இஷ்டப்படி நடப்பராகவும் இருக்கலாம். ஒருவர் தாமதமாக தூங்கி தாமதமாக எழுபவராகவும் மற்றவர் அதிகாலையிலே எழுபவராகவும் இருக்கலாம். இதனை ஒருவருக்கொருவர் முதலில் ஏற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் தேவன் இரு ஜாடிகளை அல்ல, ஜாடியையும் மூடியையுமே ஒன்றாக இணைக்கிறார்.

இருவருமே எல்லாவற்றிலும் ஒரே சுபாவமுடையவராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒருவர் தன்மையை மற்றவருக்குள் தினிக்க முயன்று தோற்றுப்போக வேண்டாம். யோபுவின் சுபாவம் தேவன் அனுமதிக்கின்ற எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்வதாகவும்; அவருடைய மனைவி சந்தோஷங்களை மட்டும் ஏற்றுக்கொள்பவராகவும் இருந்தார். யோபு 2:9-10, "அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள். அதற்கு அவன்: நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையயும் பெறவேண்டாமோ என்றான்; இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை".

**3. நெருக்கத்தின் ஆபத்து**

இரண்டு பேரும் மிகவும் நெருக்கமாக வாழ்தல் என்பது கூட சில வேளைகளில் சிறிய வித்தயாசங்களை பெரிதுபடுத்தி விடுகிறது. அவரவர்க்கே உரிய தனிபட்ட பழக்கங்கள் திருமணத்திற்கு முன் மிகவும் பிடித்ததாகவும், சில காலம் கழித்து அதுவே வெறுப்பாகவும் மாறிவிடுகிறது. நெருக்கம் மிகுதியால் திருமணத்திற்கு முந்திய வாழ்வை பற்றிய உண்மைகளை, அவ்வாறோ அல்லது மெருகேற்றியோ சொல்வதோ கூட பிரச்சனைக்கு மூலமாகிவிடுகிறது. நீ இப்படி உண்மையை பேசுவது தான் பிடித்திருக்கிறது என்பது, நாளடையில் பேசினதினதை வைத்தே பூசல்களை உண்டாக்குவதாகிவிடுகிறது.

முன்பு தேதி (பிறந்த நாள்) மறந்தால் சொல்லி நினைப்புட்டுவீர்கள். இப்பொழுது அதுவே பெரும் பிரச்சனையாகிவிடும். நெருக்கம் அன்பையும், நம்பிக்கையையும் அதிகரிக்க வேண்டுமே தவிர அது பூசல்களுக்கு காரணமாகிவிடக்கூடாது. 1கொரி 13:4-7 "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது,

அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்".

### 4. தவறான அனுகுமுறைகள்

தவறான அனுகுமுறைகளால் கருத்து வேறுபாடு அல்லது பூசல்கள் உருவாகி பெரிதாக வளர்கிறதாயிருக்கிறது. பொருத்தமற்ற சில அணுகுமுறைகள் என்னவென்று அறிய வேண்டியது அவசியமானதாகும்.

#### அ. வன்முறை

வன்முறை என்பது ஒருவர் தனது சக்தியை நேர்மையற்ற முறையில் மற்றவருக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் பயன்படுத்துவதாகும். 'நான் எவ்வளவு நேரம் தான் பொறுமையாயிருப்பேன்? விட்டேன் பாருங்க ஒரு அறை, அப்புறம் தான் அமைதியானாள்' என தனது வன்முறை செயலுக்கு நியாயம் கற்பிப்பது தேவனுடைய பார்வையில் மகா பயங்கரமானதாக இருக்கிறது. நாம் வன்முறையை பயன்படுத்தவே கூடாது! ரோமர் 12:17,21 "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு".

#### ஆ. தெறிக்கும் வார்த்தை

உங்களுக்கு பிடிக்காததை செய்யும் போது உங்கள் ஆதங்கத்தினை வெளிப்படுத்த கடினமான வார்த்தைகளை கொட்டி தீர்ப்பது ஒரு கிறிஸ்தவரின் அடையாளம் அல்ல. அது தவறானதாகும்; அதைக் குறித்து கர்த்தர் நியாயம் விசாரிப்பார்.

மத் 12:36-37 "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்".

#### இ. வெளிக்காட்டுதல்

ஒருவர் வெறுப்படையும் போது அந்த எரிச்சலையும், ஏமாற்றத்தையும், கோபத்தையும் இன்னொரு சந்தர்ப்பத்தில் வெளிகாட்ட தீர்மானிப்பது நல்லதல்ல. கிறிஸ்தவர் என்ற முறையில் உங்கள் உணர்வைப் போல் உங்களது துணையின் உணர்வுகளை

பற்றியும் அக்கறை உள்ளவர்களாயிருங்கள். எபே 4:26, நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது”;

**ஈ. மனமுறிவு அல்லது பிரிவு**

‘இருவரிடமும் கடுமையான கருத்து வேறுபாடு இருப்பதால் நம் உறவு முடிந்துவிட்டது’ என்று சாத்தான் தூண்டுவான். ஆனால், அது அல்ல தெய்வீகத் தீர்வு. பிரிவு என்பது எப்பொழுதுமே பிரச்சனைக்கு தீர்வாகிவிடாது, அதுபோல அது தேவனுடைய பிள்ளைகளின் தேர்வாகவும் இருக்கக்கூடாது. எபே 4:3 ‘‘சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்”.

**II. பிணக்குகள் அல்லது பூசல்களை சரிசெய்வது எப்படி?**

பிணக்குகள் உண்டாவதற்கான காரணங்களை நாம் படிப்பது எவ்வளவு முக்கியமோ, அதேபோன்று அதனை சரிசெய்து எப்படி என அறிவதும் மிக அவசியமானதாகும்.



உங்கள் துணையாளரிடம் இருக்கும் நல்ல குணங்கள் சிலவற்றை மனதிலே அடிக்கடி அசைபோடுங்கள்.

**1. நடக்க முடியாதவற்றை எதிர்பாராதிருங்கள்.**

எல்லா பிரச்சனைகளுக்கும் நேர்த்தியான தீர்வு கிடைத்தவிடும் என்ற எண்ணத்தோடு பூசல்களை எதிர்கொள்ள வேண்டாம். ஏனெனில் திருமணத்திற்கு முன்பு குறைந்தது 18 முதல் 22 ஆண்டுகள் அவர்கள் வாழ்ந்த பழக்கவழக்கம், பரிமாற்ற முறை, உணர்ச்சி வெளிப்பாடு உடனே மறைந்து விடும் என்றால் அது இயலாது. நீங்கள் விரும்புவது தேவனுக்கு முன்பாக நேர்மையாக இருக்குமானால் அதற்காக ஜெபத்தோடு தேவனிடம் காத்திருங்கள். சங் 27:4 கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்தி.

**2. மோதல்கள் மத்தியில் வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.**

பிரச்சனைகளுடன் வாழ உங்களை பழக்கிக்கொள்ளுங்கள். விலகிவிடுவதால் பிரச்சனை என்பது தீர்வது போல இருக்கும்; ஆனால் புதிய பிரச்சனைகளுக்கு அது வழிவகுக்கும். உங்கள் துணையாளரிடம் இருக்கும் நல்ல குணங்கள் சிலவற்றை மனதிலே அடிக்கடி அசைபோடுங்கள். நாம்

விரும்பும்படி எல்லாம் அவரோ / அவளோ மாறிவிடமாட்டார் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளுங்கள். பிரச்சனை வேண்டாம் என்று ஜெபிக்காமல், இந்த பிரச்சரனையை ஏற்றுக்கொண்டு சமாளித்து, தேவன் விரும்புகிற வாழ்வு வாழும்படி நாம் ஜெபிப்பதையே தேவன் விரும்புவார். நீங்கள் நடக்க வேண்டிய பள்ளதாக்கினை தவிர்த்துவிடாதீர்கள். சங் 23:4, ‘நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்.

**3. பிரச்சனைகளின் முக்கியத்துவத்தை மதிப்பிடுங்கள்.**

நீங்கள் விவாதிக்க போகின்ற செயலின் முக்கியத்துவத்தை மதிப்பிடுங்கள்.

**அ. உங்களை நீங்களே பரிசோதியுங்கள்.**



கவனிக்கப்படாத மனக்காயம், புரையோடிப் போய், சிறிய பிரச்சனைகளைக்கூட பெரிதாக்கிவிடலாம்.

இந்த பிரச்சனையை கிளறுவதால் என்ன நன்மை உண்டாகும், அல்லது எவ்வளவு தீமை உண்டாகும் என்று உங்களை நீங்களே பரிசோதியுங்கள். என் துணையை பழிவாங்க நான் ஆர்வமாக இருக்கின்றேனா அல்லது அவர் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேனா என உங்கள் மனோநிலையை நீங்கள் பரிசோதியுங்கள். (மத் 7:1-5)

**ஆ. காலம் தாழ்த்தாதேயுங்கள்.**

‘இந்த பிரச்சனை சரியாகும் வரை நான் இப்படித்தான் இருப்பேன்’ என்று கோபத்தோடே குடியிருக்காதீர்கள். அவர் என்னை சரியாக புரியட்டும் என ஊமையாகவும் இருக்காதீர்கள். கவனிக்கப்படாத மனக்காயம் புரையோடிப் போய் சிறிய பிரச்சனைகளை கூட பெரிதாக்கிவிடலாம். (எபே 4:26)

**இ. கவனமாய் பேசுங்கள்.**

பிரச்சனைகளை பேசுகையில் வார்த்தைகளை கவனமாக தேர்வு செய்து பேசுங்கள். எப்பொழுதுமே உங்கள் துணைவரை அற்பத்தனமானவர் என்றோ, அன்பற்றவர் என்றோ குறைகூறுவதற்கு பதில், ‘நீங்கள் அப்படி நடந்திருந்தால் எனக்கு பிடிக்கும்’ என்று மென்மையாக கூறுங்கள். கொலே 4:6, ‘‘அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று

நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக".

**ஈ. கவனமாய் கேளுங்கள்.**

உங்கள் கருத்துகளை அவரிடம் பதிவு செய்வது உங்களுக்கு எவ்வளவு முக்கியமோ, அதே போல அவரது பதில்களையும் நீங்கள் கவனமாக கேட்பது மிக அவசியம். நீங்கள் நினைத்தது ஒன்றாகவும், உண்மையில் நடந்தது ஒன்றாகவும் இருக்கலாம். உங்கள் துணையாளரையும் அறிவுள்ளவராக, மதிப்புள்ளவராக உங்களுக்கு நிகராக நினையுங்கள். யாக் 1:19, "ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்".

**உ. இருவருக்கும் ஏற்புடைய தீர்வை நாடுங்கள்.**

உங்கள் இருவரையும் கர்த்தருக்கு முன் திருப்திப்படுத்தும் ஒரு தீர்வை நாடுங்கள். தவறு இருப்பவர் மன்னிப்பு கேளுங்கள். நீங்களும் மன்னியுங்கள். பிறகு மன்னித்த பழைய கதைகளை மீண்டும் தோண்டாதிருங்கள். கொலே 3:13, "ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்".

**4. ஒரு கிறிஸ்தவர் பணிவுள்ளவர் என்பதை காண்பியுங்கள்.**

உறவு முறைக்கு மூலாதாரமே பணிவு தான். இது எப்பொழுதும் இருவருடைய மனதிலும் செயலிலும் இருக்க வேண்டும். எபே 5:21 தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். ஏனெனில் எந்த ஒர கிறிஸ்தவரும் தன் சொந்த போக்கில் போக தீர்மானிக்க முடியாது.

**இறுதியாக.....**

பிரியமானவர்களே! உங்களை சுற்றி ஓடுகிற உலகம் உங்களை வேடிக்கை பார்க்கிறது. நீங்கள் அவர்களுக்கு யாரை காண்பிக்க விரும்புகிறீர்கள். உங்களையா? அல்லது, உங்களையும் என்னையும் மீட்க தன்னை பலியாக தந்த கிறிஸ்துவையா? மத் 5:16 "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துப்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது". கிறிஸ்து சொன்னதை மனதில் வைத்துக் கொள்வோம்! செயல்படுவோம்.

– உங்கள் சகோதரன்,
**PCPR** (ஆசிரியர்)

# 14 கிறிஸ்தவராக மட்டும்
## A Christian Only



J.C. CHOATE

ஆம், எனது நண்பரே ! நீங்கள் ஒரு கிறிஸ்தவர், கிறிஸ்தவராக மட்டும் இருக்க முடியும். இது மிகைப்படுத்தப்பட்ட ஒன்று அல்ல. அதாவது, உங்களைச் சுற்றியிருக்கும் அநேகர் ஏதோ ஒரு நாமகர்ணக் கூட்டத்தின் அங்கமாக இருக்கும்போது, நீங்களும் கூட ஒரு மனித அமைப்பின் அங்கமாயிருப்பினும், உண்மை என்னவெனில், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மட்டும் இருக்க முடியும்.

இத்தருணத்தில் நீங்கள், ‘‘நான், எவ்வாறு ஒரு கிறிஸ்தவராக மட்டும் இருக்க முடியும்?” என அறிந்துகொள்ள விரும்புவீர்கள். நல்லது! இந்த கேள்விக்கு பதில் எளிமையானதே. கிறிஸ்துவின் சுவிஷேசத்திற்கு கீழ்படிவதின் மூலம் நீங்கள் எளிமையாக ஒரு கிறிஸ்தவராக மாற முடியும் ; மற்றொரு விதத்தில் கூறினால், தேவனுடைய வசனத்தில் உள்ள சத்தியத்திற்கு நீங்கள் கீழ்படிவதின் மூலம் அப்படி இருக்க முடியும்.

ஒருவேளை நீங்கள் வாதிடலாம், அதாவது: “நான் தான் சுவிசேஷத்திற்கு அல்லது சத்தியத்திற்கு கீழ்படிந்துவிட்டேனே!’’ என்று; என் நண்பரே! நீங்கள் உண்மையிலே கீழ்படிந்துள்ளீர்களா? இப்பொழுது, உங்களிடமும் கடவுளிடமும் உண்மையாக (நேர்மையாக) இருங்கள்.

நாம் கவனிக்க வேண்டிய காரியம் என்னவெனில், புதிய ஏற்பாட்டு காலத்தில் சத்தியமானது கிறிஸ்தவர்களை மட்டுமே உருவாக்கியது. ஒரே சத்தியமானது ஒருவகையான கிறிஸ்தவரையும், மற்றொரு வகையான கிறிஸ்தவரையும் உருவாக்காது. புதிய ஏற்பாட்டில் உள்ளவைகளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமானால், நீங்கள் அவைகளை உண்மையென்று ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பைபிளில் ‘கிறிஸ்தவர்’ என்ற வார்த்தை மூன்று முறை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் ஒவ்வொரு முறையும் குறிப்பாக கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே கூறுகிறது ; கிறிஸ்துவை பின்பற்றுபவர்களை குறிக்க உதவும் பெயர் மற்றும் தலைப்பிற்காக வேறு எந்த பெயருமே பயன்படுத்தப்படவில்லை. மேலும் இப்பொழுது, கிறிஸ்தவர் என்று பயன்படுத்தப்பட்டுள்ள வசனங்களைப் பார்க்கையில், **முதலாவது** லூக்காவினுடைய வாக்கியத்தை

கவனியுங்கள் : ''அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப். 11:26). இங்கே இருந்தவர்கள் முதலில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர்; அதன்பின் கிறிஸ்துவை பின்பற்றினவர்கள் எல்லாரும் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். **இரண்டாவதாக,** பவுல் அகிரிப்பா ராஜாவிடம் சுவிஷேசத்திற்கு கீழ்படியும்படி வேண்டுகிறார்; அதற்கு அவருடைய பதில் : "... நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய மாத்திரம் நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான்" (அப் 26:28). இங்கே ஏன் அகிரிப்பா ராஜா, ' ஏதோ ஒரு வகையான கிறிஸ்தவர் என்று குறிப்பிட்டு, தன்னை பவுல் சம்மதிக்கப் பண்ணுகிறார் என கூறவில்லை? மாறாக, அவர் வெறுமனை கிறிஸ்தவராக மட்டுமே மாறியிருக்க முடியும். பவுல் ஏன், அகிரிப்பா ராஜாவுக்கு இந்த கிறிஸ்தவராகவோ, அந்த கிறிஸ்தவராகவோ இருக்க முடியும் ஒரு பெயரை சொல்லி என சொல்லவில்லை. மாறாக, அவர் சத்தியத்தை மட்டுமே போதித்தார்; ஆகையினால் சத்தியமானது கிறிஸ்தவர் என்பதைத் தவிர, வேறு அடைமொழியுடன் ஒரு கிறிஸ்தவரை மாற்றாது; மேலும் அகிரிப்பா ராஜா இதை அறிந்திருந்தார்.

**மூன்றாவது,** பேதுரு கிறிஸ்தவரைப் பற்றி இப்படியாக கூறுகிறார் : ''ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துக்கடவன்'' (1 பேதுரு 4:16). ஆகையினால் ஒருவர் கிறிஸ்தவராக வாழ்வதினால், அல்லது அப்பெயரை தரித்திருப்பதினாலேயே பாடுபட்டால், அவர் அதினால் வெட்கப்படக்கூடாது; மாறாக, தான் கிறிஸ்துவின் பெயரை உடையவராக எண்ணப்படுவதினாலும், கிறிஸ்துவுக்காக பாடுபட சிலாக்கியம் கிடைத்திருப்பதினாலும் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். விளைவாக, அத்தகைய செயலின் மூலம் தேவன் மகிமைப்பட வேண்டும். இங்கேயும் கவனித்துப் பாருங்கள், இந்த எழுத்தாளர் கிறிஸ்தவர் என்ற பெயரையே பயன்படுத்துகிறார்; அதினால் கிறிஸ்தவராக மட்டுமே பேசுகிறார். அவர் மனிதன் உண்டாக்கிய எந்த பெயரையும் முன்போ பின்போ



ஒரே சத்தியமானது,
ஒருவகையான
கிறிஸ்தவரையும்
மற்றொரு வகையான
கிறிஸ்தவரையும்
உருவாக்காது.

சேர்க்கததினால், நாமும் அப்படிச் செய்யலாகாது.

மேலும், இப்பொழுது இந்த எளிமையான உண்மைகளை கவனியுங்கள்:

1). ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமெனில், சத்தியத்தை எந்த விதத்திலும் எந்தவித சேர்மானமும், கழித்தலும், மாற்றமும் இல்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் (வெளி 22: 18,19).

2). ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமெனில், கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, தன் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவின் பெயரை அறிக்கைசெய்து, இரட்சிக்கப்படும்படியாக ஞானஸ்நானம் பெறுவதினால் சுவிசேஷத்திற்கு கீழ்படிய வேண்டும் (மாற்கு 16:16; அப் 2:38).

3). ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமெனில், கிறிஸ்து ஸ்தாபித்த அந்த சபையிலே அங்கமாக இருக்க வேண்டும் (மத் 16:18; ரோ 16:16).

4). ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமெனில், கிறிஸ்துவின் பெயரை தரித்துக்கொள்ள வேண்டும் (1 பேதுரு 4:1).

5). ஒருவர் கிறிஸ்தவராக இருக்க வேண்டுமெனில், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் (யோ.10:20; அப் 20:7).

6). ஒருவர் கிறிஸ்தவராக இருக்க வேண்டுமெனில், தேவனிடத்தில் விசுவாசமாக வாழ வேண்டும். (வெளி. 2:10 ; யாக் 1:12).

தயவுசெய்து இந்த குறிப்புகள் அனைத்தையும் மறுபடியும் மறுபடியும் சிந்தித்துப் பார்த்து, ஒவ்வொரு முறையும் உங்களை நீங்களே கேள்வி கேட்டுக் கொள்ளுங்கள்: "பைபிள் போதிக்கிறபடி நான் ஒரு கிறிஸ்தவரா?

அன்பானவரே ! வாழ்க்கையானது கடந்து போய் கொண்டிருக்கிறது ; நாமும் சீக்கிரத்தில் இங்கே இருந்து செல்ல வேண்டும். ஆகையினால், இன்றே நியாயத்தீர்ப்பிற்கும், அதற்கு பின் உள்ள வாழ்விற்கும் தயாராகுங்கள். சத்தியத்திற்கு கீழ்படியுங்கள் – கிறிஸ்தவராக மட்டும் இருங்கள்; அதாவது ஆண்டவருடைய சபையின் அங்கமாக இருக்க முடியும் ; மேலும், மரணபரியந்தம் தேவனிடம் விசுவாசமாக (உண்மையாக) இருங்கள், அப்பொழுது பரலோகம் உங்களுடையதாகும்.

ஆம், நீங்கள் கிறிஸ்தவராக மட்டுமே இருக்க முடியும்; அதற்கு மிஞ்சியுமில்லை, அதற்கு குறைவாகவுமில்லை.

# 9 அன்புக்குப் பாத்திரமானவர்களால் யோபுவுக்கு வந்த ஏமாற்றம்



- சகோ. P.R. சாமி (பெங்களூரு)

நீங்கள் எப்பொழுதாவது உங்களுடைய நண்பர்களால் ஏமாற்றப்பட்டிருக்கிறீர்களா? உங்களுடைய அன்புக்குப் பாத்திரமானவர்களால் கைவிடப்பட்டிருக்கிறீர்களா? யாரோ ஒருவர் உங்களை நேசிப்பதுபோல் நடித்து ஏமாற்றி இருக்கிறார்களா? மனித இதயத்தை சுக்கு நூறாக உடைக்கும் கூர்மையான வலிகளில் இதுவும் ஒன்று. மரணத்தை காட்டிலும் ஆழமாக இதயத்தை வலிக்கச் செய்யும். யோபு தன் அருமை மனைவியாலும், நண்பர்களாலும் கைவிடப்பட்டபோது, இது உண்மைதானா என்று தன்னையே நம்ப முடியாத நிலையில் இருந்தான்.

இயேசுவோடு உண்டு, உறங்கி, நெருங்கி ஜீவித்த உற்ற நண்பனான யூதாஸ் தன்னை விரோதிகளிடத்தில் காட்டிக் கொடுத்தபோது, கிறிஸ்துவின் உள்ளத்தில் எப்படிப்பட்ட வலி உண்டாயிருக்கும்? இது தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டபோது சங்கீதக்காரன் கூறுகிறார், ''என் பகைஞரெல்லாம் என்மேல் ஏகமாய் முணுமுணுத்து, எனக்கு விரோதமாயிருந்து, எனக்கு பொல்லாங்கு நினைத்து, தீரா வியாதி அவனைப் பிடித்துக்கொண்டது. படுக்கையில் கிடக்கிற அவன் இனி எழுந்திருப்பதில்லை என்கிறார்கள். என் பிராண சிநேகிதனும் நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் குதிக்காலைத் தூக்கினான்" (சங் 41:7-9). சங்கீதக்காரன் தாவீது இந்த உணர்ச்சிகள் எப்படிப்பட்டவை என்று தன் அனுபவத்திலே கண்டு இருக்கிறான். அவனுடைய சொந்தக்குமாரன் அப்சலோமே, அவனுக்கு விரோதமாய் கலகம் செய்ய முன்வந்தான். இது தேவனுக்கு விரோதமான செயலாகும். ஏனெனில் தாவீது தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவனாயிருந்தான். தனக்கு ஒரு காலத்தில் இருந்த உயர்ந்த ஒழுக்க நெறியை விட்டு தன் மகன் இப்படி போனது தாவீதின் உள்ளத்தை தாக்கியது. அப்பொழுது மகன் இறந்துவிட்டான் என்ற செய்தி கேட்டவுடன், அவன் வருத்தம் இன்னும் அதிகமாயிற்று. முறிந்த ஆவியோடே இதயத்தை பிளக்கும் கதறல், "என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாக செத்தேனானால் நலமாயிருக்கும். அப்சலோமே, என் மகனே, என் மகனே என்று சொல்லி அழுதான் (2 சாமு 18:33).

**நான் ஒன்றுக்கும் பிரயோஜன–மில்லை என்ற எண்ணம் :**

என் பிராணன் காற்றைப் போலிருக்கிறது என்று யோபு கூறினான் (யோபு 7:7). தனக்கும், மற்றவர்களுக்கும் தன்னால் ஒரு பிரயோஜனமுமில்லை என்று எண்ணினான். கடுமையான வியாதியால் பிடிக்கப்பட்டு புழுத்துப்போன சரீரத்தையும், எலும்பும் தோலும், அதற்குள்ளே அலைக்கழிக்கப்பட்ட அமைதியில்லாத ஆவியையும் உடையவனாக இருந்தான். ஆகவே, ஜீவியத்தினால் என்ன நன்மை? அதில் எந்தவித உபயோகமுமில்லை என்பதாக எண்ணினான். ஆனால் பிற்கால சந்ததி இந்தக் கதையைப் படித்து ஆறுதல் பெறுவார்கள் என்று அவனுக்குத் தெரியாது. இப்படிப்பட்ட பிரச்சனைகளால் நீங்கள் அவதிப்படும் போது, தூரத்தில் நின்று கவனிக்கும் அநேகர், இதில் உங்களுடைய வெற்றியைக்கண்டு தாங்கள் தேற்றப்படுவர் என்று உங்களுக்குத் தெரியாது. எந்த ஒரு மனிதனுக்கும் தன் சொந்த வாழ்க்கையின் மதிப்பை எடைபோடக்கூடிய ஆற்றல் கிடையாது.

இவை எல்லாம் சேர்ந்து யோபுவின் இதயத்தை பெரிய துயரத்தால் மூழ்கடித்தது. இந்நிலை வரும்பொழுது தற்காலிகமாக, எந்த பலவானும் வளைந்துவிடுவார்கள். அடுக்கடுக்காய் துன்பங்கள் வந்து சந்தர்ப்பங்கள் அவனுக்கு விரோதமாக இருக்கின்ற நிலையில்தான் யோபு, என்ன செய்வதென்றறியாது இருந்தான். “அவன் துக்கம் மகா கொடிய துக்கம் என்று கண்டு, ஒருவரும் அவனோடு ஒரு வார்த்தையும் பேசாமல், இரவு பகல் ஏழு நாள் அவனோடுகூடத் தரையிலே உட்கார்ந்திருந்தார்கள்” (யோபு 2:13). உற்சாகமிழுந்துபோன அந்தத் துயரப்படுகிறவன் கூறியது, ‘‘அழுகிறதினால் என் முகம் அழுக்கடைந்தது, மரண இருள் என் கண்ணிமைகளின் மேல் உண்டாயிருக்கிறது” (யோபு 16:16).

அந்தப்படி யோபு ஒரு கோழையுமல்ல, ஒரு தைரியசாலிதான். எப்பேர்ப்பட்ட சக்தி, குணம் உடையவனாயிருந்தாலும், அழுவதற்கும் ஒரு காலமுண்டு என்பதை மறந்துவிடக்கூடாது. இதயமே வெடித்துப்போகும் அளவுக்கு உணர்ச்சிகளால்



வாழ்க்கையானது கடந்து போய் கொண்டிருக்கிறது ; நாமும் சீக்கிரத்தில் இங்கே இருந்து செல்ல வேண்டும். ஆகையினால், இன்றே நியாயத்தீர்ப்பிற்கும் அதற்கு பின் உள்ள வாழ்விற்கும் தயாராகுங்கள்.

பிடிக்கப்பட்டிருக்கும்போது கண்ணீர் ஒன்றுதான் பாதுகாப்பான வழி. யோபுவுக்கு அந்த ஒரே மருந்துதான் இருந்தது. கண்ணீரினால், கலங்கிப்போன இதயத்தைப் தேற்றிக் கொண்டான்.

வாழ்க்கையே வெறுப்புண்டாகுமளவுக்கு துயரம் நம்மை இழுத்து செல்லும். யோபு தன் மனைவி கூறியபடி தற்கொலை செய்யாமல் போனாலும், மரணத்தை வாஞ்சிக்கிறவனாயிருந்தான். ''அதினால் என் ஆத்துமா, நெருக்குண்டு சாகிறதையும், என் எலும்புகளோடே உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் மரணத்தையும் விரும்புகிறது" என்றான் (யோபு 7:15).

இப்படிப்பட்ட பயங்கரமான நிலைக்குள்ளாக்கப்பட்டவன் யோபு மாத்திரல்ல. எரேமியா என்ற பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியும் கூட, "நான் பிறந்த நாள் சபிக்கப்படுவதாக. உமக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்ததென்று என் தகப்பனுக்கு நற்செய்தியாக அறிவித்து, அவனை மிகவும் சந்தோஷப்படுத்தின மனுஷன் சபிக்கப்பட்டவன். அந்த மனுஷன் கர்த்தர் மனம் மாறாமல் கவிழ்த்துப்போட்ட பட்டணங்களைப் போலிருந்து, காலமே அலறுதலையும், மத்தியான வேளையிலே கூக்குரலையும் கேட்கக்கடவன். என் தாயார் எனக்கு பிரேதக்குழியும், நான் என்றைக்கும் பிரசவியாத சூலுமாய் இருக்கத்தக்கதாக கர்ப்பத்திலே நான் கொலை செய்யப்படாமற் போனதென்ன? நான் வருத்தத்தையும் சஞ்சலத்தையும் கண்டு என் நாட்கள் வெட்கமாய்க் கழியும்படிக்கு நான் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டதென்ன?" என்கிறார். (எரே 20:14-18). எலியா தீர்க்கதரிசியும் "போய் ஒரு சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து, நான் சாகவேண்டும் என்று கோரி, போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்'' என்றான்'' (1 இராஜா 19:4).

இப்படிப்பட்ட துன்பங்கள் முதியோரை மாத்திரமா ஆட்கொள்ளுகிறது என்றால், இல்லை! இளவயதினரும் பாதிக்கப்படுகின்றனர். கல்லூரி மாணவர்களிடையே மோட்டார் விபத்துக்களுக்கு அடுத்தப்படியாக இருப்பது தற்கொலைதான். உள்ளான புயலினால் அலைக்கழிக்கப்பட்டு, பொறுக்கமுடியாத துன்பம் வந்து, அதை சமாளிக்க முடியாத நிலையில் யோபுவைப் போல் அவர்கள் மரணத்திலே அமைதி காணவிழைகின்றனர். அவிசுவாசிகளுக்கும், கீழ்படியாதவர்களுக்கும் மரணம் இளைப்பாறுதலைத் தராது. யோபு, எலியா, எரேமியா போன்றவர்கள் ஜீவிக்க வேண்டும் என்ற ஆசையை இழந்துவிட்ட போதிலும், தங்களைத்

தாங்களே அழித்துக்கொள்ள என்றும் முயற்சி செய்யவில்லை. ஏனெனில், இந்த சரீரம். ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார் (1 கொரி 3:16, 17). தற்கொலை என்பது நம்முடைய பிரச்சனைகளுக்கு முடிவில்லை.

சாத்தானும், பாவமும் இவ்வுலகில் இருக்கும் வரை பிரச்சனைகள் இல்லாமல் இருக்காது. மனிதன் சிருஷ்டிக்கப்படும்போது பாவமில்லாமல் பரிசுத்தமான நிலையிலிருக்கிறான். பொறுப்பேற்கும் வயது வந்தவுடன், தேவனுடைய கட்டளைகளை மீறி பாவம் செய்கிறான் (1யோவான் 3:4). பாவம் மனிதனை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது (ஏசா 59:2). பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). பாவத்தை செய்கிறவன் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான். "நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்சமும் மனமும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். தேவனோ இரக்கத்தின் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்து, தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபே 2:3-5).



சாத்தானும், பாவமும்
இவ்வுலகில் இருக்கும் வரை,
பிரச்சனைகள்
இல்லாமல் இருக்காது.

தேவன் நம்முடைய பாவத்திற்காக தம்முடைய குமாரனாகிய கிறிஸ்துவை கல்வாரி சிலுவையில் இரத்தம் சிந்த வைத்தார். அந்த இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு அவருக்குள் உண்டாயிருக்கிறது (எபே 1:7). நீங்கள் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, பழைய பாவங்களை விட்டு மனந்திரும்பி, கிறிஸ்துவை வாயினால் அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால், இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய சபையிலே அவரால் அங்கமாக்கப்படலாம். அப்போது தேவ சமாதானத்தை பெறுகிறீர்கள். பிறகு தேவ வசனமாகிய வெளிச்சத்தில நடந்தால் என்ன கொடிய பிரச்சனைகள் வந்தாலும் அவைகளை தாங்கத்தக்க சக்தியையும், பெலனையும், அவற்றினின்று விடுவிக்கும்படியான போக்கையும் தேவன் உண்டாக்குவார். (1கொரி 10:13).

- (தொடரும்)

# 14 எல்லாரும் குணமாக்கும் வரங்களை உடையவர்களா?

(- **தொடர்ச்சி**)

புதிய ஏற்பாட்டில் சுகமளிக்கும் வரங்களை மூன்று படிகளாகப் பகுத்து, சுவிசேஷப் புத்தகங்களில் இயேசுவின் அற்புதம் குறித்துப் பார்த்தோம். புதிய ஏற்பாட்டில் அற்புத சுகமளித்த இரண்டாவது படி, அப்போஸ்தலர்களால் நடப்பிக்கப்பட்டது.

மத்தேயு 10:1-ல் பன்னிருவருக்கும், லூக்கா 10:9-ல் எழுபது பேருக்கும், கட்டளையிட்டு ஊழியத்துக்கு அனுப்பும்போது அவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்து, இயேசு “ அசுத்த ஆவிகளைத் துரத்தவும் சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். ” இதில் பன்னிரு அப்போஸ்தலருக்கு மட்டுமே வாழ்நாள் வல்லமையாக இந்த வரம் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. மாற்கு 16:17-20-ல் இயேசு, அப்போஸ்தலருக்கு இதையே பிரதானக் கட்டளையிலும் அதிகாரமளித்ததாக சிலர் நம்புகின்றனர். ஆனால் மாற்கு 16:17-20 மூலபாஷையில் இருக்கவில்லை என்றே பெரும்பாலான வேத வல்லுநர்கள் கூறுகின்றனர். லூக்கா 10:9-ல் எழுபது பேருக்கு ஒரு முறை கட்டளையாகவே கொடுக்கப்பட்டது. எப்படியிருப்பினும் மாற்கு 16:17-20 குறித்து பின்னதாக விவாதிப்போம்.

அப்போஸ்தலர்களின் ஊழியக்காலத்தில் பிறவிச்சப்பாணி (அப்போஸ்தலர் 3:1-4; 14:8-10), ஜுரம் (அப் 28:8) திமிர்வாதக்காரன் (அப். 13:33,34), மரித்தோர் எழுப்பப்படுதலும் (அப் 9:36-42). நடந்தது. பேதுருவின் நிழல் பட்டாலும், ஜனங்கள் சுகம் அடைந்தார்கள் (அப் 5:15,16) இது ஏதோ மாய வித்தைக் காரன் கூட்டம் போட்டுக் காண்பித்த மந்திரத்தைப் போன்றதல்ல; தற்செயலாய், இயல்பாய் நடந்த ஒன்று. (மத்தேயு 19:11,12).

இப்படி அப்போஸ்தலர்கள் நடப்பித்த எந்த அற்புத சுகத்தையாகிலும், இன்று யாராகிலும் வெளிப்படையாகச் செய்துள்ளார்களா? சிந்தியுங்கள்! அப்போஸ்தலர்கள் அவ்வளவு வல்லமை பெற்றிருந்தும், ஒருவர் கூட அதை சுயநலத்துக்காக பயன்படுத்தவில்லை. பணம்

(காணிக்கை எனும் பெயரில்) ஜெபக்கோபுர ஜெபத்துக்கும், எண்ணெய் விற்றும் சம்பாதிக்கவில்லை. "ஐந்து அப்பம், இரண்டுமீன்'' பெயரைச்சொல்லி கொள்ளையடிக்கவில்லை. தீமோத்தேயுவின் வயிற்றுக்கோளாறு (1 தீமோத்தேயு 5:23, துரோபீமின் வியாதி (2 தீமோத்தேயு 4:20), எப்பாப்பிராதீத்துவின் மரணத்துக்கு சமீபமான சுகவீனம் (பிலிப்பியர் 2:25-27) ஆகியோர் பவுலுக்கு மிகவும் நெருங்கின உடன் ஊழியர்கள். ஆனால் அற்புத சுகமளிக்காமல் ஓய்வையும், திராட்ச ரசத்தையும் பவுல் இவர்கட்கு பரிந்துரைக்கிறார்.

பவுல் தனது மாம்சத்திலிருந்து ஒரு முள்ளை அற்புத சுகத்தால் சொஸ்தமாக்கிக் கொள்ளவில்லை (2 கொரிந்தியர் 12:7-10). ஜெபித்தார், நடக்கவில்லை எனினும் தேவனுடைய பதிலில் திருப்தியடைந்தார். அந்த சுகவீனத்தை ''தான் தன்னை உயர்த்தாத படிக் காக்கவும்" (வச.7)" , கிறிஸ்துவின் வல்லமை அவர்மேல் தங்கவும்" (வச.9), கிறிஸ்துவின் மித்தம் அவைகளை அனுபவிக்க தான் பிரியப்படுவதாகவும் கூறினார் (வச.10). ஏன் பவுல் அற்புத சுகத்தினால் சொஸ்தமடையவில்லை? தேவனுடைய தூதனோடு போரிட்டு பிறகு ஆசீர்வாதம் பெற்ற யாக்கோபு, சுளுக்கப்பட்ட தொடை சந்து நரம்பை, ஏன் அற்புதமாக சுகம் பெற்றுக் கொள்ள முயற்சிக்கவில்லை? இவையெல்லாவற்றுக்கும் ஒரே பதில், அற்புத சுகமளித்தல் எல்லாம் தேவனுடைய சித்தத்தின்படி தற்காலிகமானவையே'. குறிப்பிடப்பட்ட மருத்துவம், அவர்கள் காலத்திலும் பரிந்துரைக்கப்பட்டது தான் நிரந்தரமானது.

3. **மூன்றாவதாக,** அப்போஸ்தலர்களுக்கு அடுத்து முதல் நூற்றாண்டின் இறுதிவரை நடப்பிக்கப்பட்ட ஆதிக் கிறிஸ்தவர்களின் அற்புத சுகங்கள். இவர்கள் அப்போஸ்தலரின் கைகளை வைப்பதன் மூலம் சுகமளிக்கும் வரங்களை நடப்பித்தவர்கள். அப் 6:6-ல், அப்போஸ்தலரின் கைகளை வைப்பதன் மூலம் ஆவிக்குரிய அற்புத வரங்களை பெற்றவர்கள் 7பேர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஸ்தேவானும் பிலிப்புவும் இருந்தார்கள் (வச.6). ஸ்தேவான் அநேக அற்புதங்களையும்



அப்போஸ்தலர்கள் அவ்வளவு வல்லமை பெற்றிருந்தும், ஒருவர் கூட அதை சுயநலத்துக்காக பயன்படுத்தவில்லை.

அடையாளங்களையும் நடப்பித்தார் (வச.8). ஆகிலும் அந்த வரங்களை யாருக்கும் கொடுக்கவில்லை. அப் 8:7,8-ல், பிலிப்பு சமாரியாவுக்குப் போய் அநேகர் அற்புத சுகமடையச் செய்ததுடன், பிசாசுகளையும் விரட்டினார். அவரது அற்புதங்களெல்லாம் மாய வித்தைக்காரனாகிய சீமோனே, தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான் என்று கருதப்பட்டவனே, கண்டு வியந்து தன்னை தேவனுக்குக் கீழ்படுத்தக் கூடியவைகளாயிருந்தது (அப். 8:10,13). ஆகிலும் அந்த வரங்களை பிலிப்பு, யாருக்கும் கொடுக்கும் அதிகாரம் இருக்கவில்லை (வச.14-24). இப்படியாக கடைசி அப்போஸ்தலனோடு, குணமாக்கும் வரங்களும் நின்று போயிற்று. இன்று என்ன அடிப்படையில் குணமாக்கும் வரங்களை நடப்பிக்கக்கூடும்?

**அற்புத சுகமா? விசுவாச சுகமா?**

அற்புத சுகத்தைக் கொடுப்பதாகக் கூறும் நபர்கள், அநேக நொண்டிச் சாக்குகளை வைத்துள்ளனர்.

1. தங்களுடைய ஜெபத்தினால் "இன்னின்னார் சுகம் பெற்றனர் என்று கூட்டத்தில் சாட்சியிட வைக்கின்றனர். இயேசு மனுஷனுடைய சாட்சியை ஏற்றுக் கொள்வதில்லை (யோவான் 5:34). இது "குறித்து சாட்சி கொடுப்பது சரியா" என்ற தலைப்பில் காண்போம்.

2. சுகம் பெற வந்த நபர் விசுவாசமில்லாமையால் சுகம் பெறவில்லை.

3. 'வெளிப்படையாய்க் காணும் எந்த சுக வீனமும், ஏன் உங்கள் கூட்டங்களில் சுகமாக்கப்படவில்லை'? என்று கேட்டால், ''ஆவியான வரை சோதிக்காதீர்கள்'' என்கின்றனர். 1 யோவான் 4:1ல் நமக்கு அவர்களைச் சோதிக்க உரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

4. விசுவாச சுகமே! அற்புத சுகம்! என்பது இவர்களுடைய வாதம், "பிடிவாதம்".

வேதாகமத்தில் நடப்பிக்கப்பட்ட அற்புத சுகங்களெல்லாம் சுகமாக்கப்பட்ட நபர்களின் விசுவாசத்தோடு சம்பந்தப்பட்டிருக்கவில்லை. அப்படியிருந்தால் சந்திரரோகமுடைய ஒரு வாலிபனை தமது அப்போஸ்தலர் சுகப்படுத்த முடியாமற்போன போது, சுகப்படுத்த வேண்டிய ''உங்கள் அவிசுவாசத்தினாலேதான்'' என்று இயேசு சொன்னார். (மத்17:14-20). எனவே பொய்யாக அற்புத சுகமளிப்பதாகக் கூறும் இன்றைய

நபர்களின் வேஷத்தை அறிந்து கொள்ளுங்கள்.

அற்புத சுகமளிக்க, வியாதியஸ்தர் தன் வியாதியின் மேல் கையை வைத்துக்கொள்ளச் சொன்னதாக வசனம் இல்லை. பொது மேடைபோட்டு, மைக்செட் வைத்து, ஏராளமான விளம்பரங்களுக்குப் பின் நடப்பிக்கப்படவில்லை. அப்படியிருந்திருந்தால் அன்று இயேசுவின் பூமிக்குரிய வாழ்வின் நாட்களிலேயே விளம்பரத்தட்டிகளும், Flex போர்டுகளும் ஏராளமான வருமானத்தைக் கொடுத்திருக்கும். அற்புத சுகமளித்தவர்கள் அன்று சாட்சியிட வைக்கவில்லை. அன்று அற்புத சுகமளித்தவர்கள் சுகவீனப்பட்டவர்களைத் தொட்டுத் தடவி தலையின் மேல் கைகளை வைத்து எப்போதும் சுகமளிக்கவில்லை. இவைகளெல்லாம் இன்றைய நபர்களின் நாகரீக அரங்கேற்றம். அற்புத சுகம் என்பது “உடனே, அந்த நொடியிலேயே” கிடைத்த ஒன்று. அற்புத சுகமளிப்பவரே, உங்கள் விசுவாசத்தினால் மரித்தவர்களை ஏன் இன்று எழுப்புவதில்லை? எங்கோ நடந்ததாக கதை சொல்லாதீர்!

விசுவாச சுகம் அன்றும் இன்றும் உலகம் இருக்கும் வரை என்றும் உண்டு. அதற்குத் தேவை மருத்துவ சிகிச்சையோடு கூடிய ஊக்கமான ஜெபம் (யாக்கோபு5:13-16). அது தேவனால் மட்டுமே சகல சுகமும் கிடைக்கிறது என்கிற உண்மையை நிலை நிறுத்துகிறது. “எண்ணெயும் திராட்ச ரசமும்” மருந்துக்காக ஆண்டவர் கூறுவது தான். தற்காலிகமான அற்புத சுகத்திற்கல்ல (லூக்கா 10:33,34; காண்க ஏசாயா 1:6; மத்தேயு 9:12). விசுவாச சுகம் தேவனுடைய சித்தத்தின்படி கொஞ்சம் கொஞ்சமாகவோ உடனடியாகவே கிடைக்கலாம். சுகமளிக்காமலே ஒருவரை எடுத்துக்கொள்ளவும் கூடும். இதைக் கொண்டுபோய் அற்புத சுகம் என்று குழப்ப வேண்டுவது ஏன்?

எதிர்பாருங்கள். எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? விவாதிப்போம்.

- தொடரும்

**இ.ஏ.ஆறுமுகம்** (போதகர்)
திண்டுக்கல்.



எந்த ஒரு மனிதனுக்கும்,
தன் சொந்த வாழ்க்கையின்
மதிப்பை எடைபோடக்கூடிய
ஆற்றல் கிடையாது.

# புதிய ஏற்பாட்டில் சபையின் உருவகங்களும், பெயர்களும்

-தொடர்ச்சி

❖ **ஆவிக்குரிய வகையில் உடுத்துவிக்கப்பட்டவர்கள் என்ற வகையில்**

*கலாத்தியர் 3:27* - ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே! (ரோமர் 13:12-14; எபே. 4:22-24; 6:12-20; 1தெச. 5:5-8ஐயும் காணவும்.)

❖ **தங்கள் உடைகளைக் கறைப்படுத்திக் கொள்ளாதவர்கள் என்ற வகையில்**

*வெளிப்படுத்தின விசேஷம் 3:4* ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சில பேர் சர்தையாலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள்.

❖ **இயேசுவைத் தங்கள் இருதயங்களில் விருந்தாளியாய் ஏற்றுக் கொண்டு, அவரை விருந்தளிப்பவராகும்படி அனுமதித்தவர்கள் என்ற வகையில்.**

*வெளிப்படுத்தின விசேஷம் 3:20*- இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் ; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.

❖ **கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற எல்லாருடனும் சமத்துவத்தில் பிரவேசித்துள்ளவர்கள் என்ற வகையில்**

*கலாத்தியர் 3:28* - யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.

❖ **ஆவியின் ஒருமையைக் காக்க நாடுகின்றவர்கள் என்ற வகையில்**

*எபேசியர் 4:1-3*-ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

❖ **கிறிஸ்துவிடம் வந்துள்ளவர்கள் என்ற வகையில்**

*மத்தேயு 11:28,29*-வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே ! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் ; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

❖ **கிறிஸ்துவுடனான ஒருமைப்பாட்டிற்குள் பிரவேசித்துள்ளவர்கள் என்ற வகையில்**

*ரோமர் 6:3*- கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?

*ரோமர் 6:4*- மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

❖ **கிறிஸ்துவுடன் ஒருமைப்பாட்டிற்குள் வாழ்கின்றவர்கள் என்ற வகையில்**

*ரோமர் 6:8*-ஆகையால் கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப்

ஒருவர் கிறிஸ்தவராக
வேண்டுமெனில்,
சத்தியத்தை, எந்த விதத்திலும்
எந்தவித சேர்மானமும், கழித்தலும்,
மாற்றமும் இல்லாமல்
ஏற்றுக்கொள்ள வேண்டும்
(வெளி 22: 18,19).



பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்.

*ரோமர் 8:17* - நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே ; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.

*கலாத்தியர் 2:20* – கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.

*எபேசியர் 2:5* –அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.

*கொலோசெயர் 3:3*– ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.

**எந்நாளும் வளருகின்ற கட்டிடம் என்ற வகையில்**

*எபேசியர் 2:21,22*–அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியானாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

**❖ பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள் பற்றியவை (7)**

**❖ மீட்கப்பட்டவர்கள் என்ற வகையில்**

*எபேசியர் 1:7,8*- அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும், புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணினார்.

**❖ நீதிமான்களாக்கப்பட்டவர்கள் என்ற வகையில்**

*ரோமர் 3:23,24* –எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.

*ரோமர் 5:1–* இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.

**❖ ஒப்புரவாக்கப்பட்டவர்கள் என்ற வகையில்**

*2 கொரிந்தியர் 5:18,19–* இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது ; அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.

**❖ இரத்தத்தில் கழுவப்பட்டவர்கள் என்ற வகையில்**

*அப் 22:16–* இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்.

**❖ ஜீவனைப் பெறுகிறவர்கள் என்ற வகையில்**

*அப் 11:18–* இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து : அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

*யோவான் 5:13* –உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.

**❖ பிதாவையும் குமாரனையும் பெறுகின்றவர்கள் என்ற வகையில்**

*1 யோவான் 2:24–* ஆகையால் ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது ; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.

*- Thanks to*
**Truth For Today**

# 7 மோசேயின் சாக்குபோக்குகள் (யாத் 3 &4)

## The Excuses of Moses (Ex. 3 &4)

**அறிமுகம்:–**

அ) இன்று நம்மில் அநேகரைப் போலவே மோசேயும் இருந்திருக்கிறார்.

ஆ) ஒரு வேலையைச் செய்யும்படி கர்த்தர் மோசேயை அழைத்தபோது, அவர் சாக்கு போக்குகளை கூறினார்.

இ) நாமும் மோசேயின் சாக்குபோக்குகளை ஆராய்ந்து அவற்றில் இருந்து கற்றுக் கொள்வோம்.

**I) சாக்குபோக்கு # 1 – " நான் எம்மாத்திரம்?**

அ) யாத். 3:11 ஆ) ரோமர் 8:31

**II) சாக்குபோக்கு # 2 – " நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்"?**

அ) யாத் 3:13–15 ஆ) யோவான் 8:57,58 இ) வெளி. 1:11

**III) சாக்குபோக்கு # 3 – "அவர்கள் என்னை நம்பார்கள்"**

அ) யாத் 4:1 ஆ) ரோமர் 10:17 இ) ஏசாயா 55 :11

**IV) சாக்குபோக்கு # 4 – "நான் வாக்குவல்லவன் அல்ல, நான் திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன்"**

அ) யாத் 4:10,11 ஆ) 1கொரி 2:3–5 இ) ஏசாயா 6:8

**V) சாக்குபோக்கு # 5– ".... யாரையாகிலும் அனுப்பும்"**

அ) யாத் 4:13 ஆ) ஏசாயா 6:8

**இறுதியாக**

அ) நீங்களும் மோசேயைப் போல சாக்குபோக்குகளை கூறுகிறீர்களா?

ஆ) உங்கள் சாக்குபோக்குகளை மேற்கொண்டு மோசேயைப் போல ஆண்டவருக்கு சேவை செய்யுங்கள்.

இ) ஆண்டவர், 'உங்களை நம்பி இருக்கிறார்'.

தொடர் 2

# உங்கள் வாழ்க்கையில் சந்தோஷமின்றி இருக்க, சில ஆலோசனைகள்.....

– தொடர்ச்சி...

**11. எப்பொழுதும் நீங்கள் சரியாக இருங்கள்; மற்ற யாரையும் உங்களைவிட சரியாக இருக்க அனுமதியாதிருங்கள்:**

பெருமை நிறைந்தவர்களும், தங்களுடைய தவறுகளை ஒத்துக்கொள்ளாதவர்களும் உண்மையான சந்தோஷத்தை அடைய மாட்டார்கள். ''அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும்; ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு" (நீதி 13:10).

**12. சிறிய பிரச்சனைகளை பெரிதாக உருவாக அனுமதியுங்கள்:**

பிரச்சனை சிறியதாக இருக்கும்போது அதை கண்டு கொள்ளாதீர்கள், மேலும் அந்த பிரச்சனை தானாக சரியாகிவிடும் என நம்புங்கள் இது முட்டாள்தனமானது! நீங்கள் யாரோ ஒருவராலே பாதிக்கப்பட்டாலோ அல்லது உங்களால் யாராவது ஒருவர் பாதிக்கப்பட்டிருந்தாலோ, அப்பிரச்சனை சிறியதாக இருக்கும்போதே நீங்கள் அந்த நபரிடம் சென்று அக்காரியத்தை சரிசெய்ய வேண்டிய கடமை உங்களுக்கு உண்டு (உதாரணம் மத்5:23,24). பாருங்கள்! பிரச்சனைகளை பெரிதாக உருவாகும் முன்பே அவற்றை சரிசெய்ய மிகப்பெரிய ஞானம் தேவைப்படும்; இது மாம்ச காரியத்திலும் சரி, ஆவிக்குரிய காரியங்களிலும் சரி, பொதுவானதே.

**13. உங்களுடைய செயல்களுக்கு எப்போதுமே நீங்கள் பொறுப்பு ஏற்காதீர்கள். மாறாக, உங்களை சுற்றியிருக்கும் அனைவரையும் பலி சொல்லுங்கள்:**

இத்தகைய செயல் சாத்தியமான (ஆரோக்கியமான) மனநிலைக்கு உதவாது (உதாரணம் ஆதி 3:11–13).

**14. யாருமே உங்களுக்கு உதவுவதற்கு அனுமதிக்காதீர்கள்:**

மிகவும் பெருமையுடனும் கர்வத்துடனும், 'நமக்கு உதவி நிச்சயமாக தேவை' என்ற சூழலில் யாருடைய உதவியையும் ஏற்றுக்கொள்ளாததும், யாரிடமும் உதவி கேட்காததும் ஒரு

முட்டாள்தனமான செயல். "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலா6:2)

**15. காரியங்கள் கடினமாகும்போது, அதை கைவிட்டுவிடுங்கள்:**

ஒரு செயல் சுமூகமாக செல்லுகையில் அதை செய்துவிட்டு, அதுவே சிறிது சவாலாக மாறும்போது அதை கைவிட்டுவிடுகையில் நீங்கள் உங்கள் தாலந்தை எல்லாம் வீணாக்குவீர்கள். *மத் 10:22*ல் இயேசு, ''..... முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" என்றார்.

**16. ஒவ்வொரு நாள் இரவும் நான்கு அல்லது ஐந்து மணிநேரம் மட்டும் தூங்குங்கள்; மேலும், அது போதும் என உங்களையே சமாதானப்–படுத்திக்கொள்ளுங்கள்:**

ஆராய்ச்சிகள் சொல்லுவது என்னவெனில், ஒரு சராசரி மனிதனுக்கு 7 முதல் 9 மணி நேர தூக்கம் அவசியம். இதைவிட அதிகமான தூக்கம் அவசியமில்லை, தூங்கினால் ஆபத்துமில்லை. ஆகையால், சந்தோஷமின்றி இருக்க தூக்கத்தை தொலைத்துவிடுங்கள். மேலும் அதே நேரத்தில் சோம்பேறியாக தூங்கிக் கொண்டேயிருப்பவர்கள், நீதி 6:9 சொல்வதுபோல் மறு எல்லைக்கு செல்கின்றனர். "சோம்பேறியே, நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பாய்?"

(தொடரும்)

– **சகோ. கிங்ஸ்லி ராஜா** (தமிழில்)

---

பொதுவான செய்திகள்

# உணவே மருந்து

1. முடக்காத்தான் தோசை – வாரம் ஒரு முறை உணவில் சேர்த்துக்கொண்டால், வயதான பின்பு மூட்டுவலி வராமல் தவிர்க்கலாம்.
2. பிரண்டை துவையல் – கால்சியம் நிறைந்தது. இதனை உண்பதால் 70 வயதிலும் எலும்புகள் உறுதியாக இருக்கும்.
3. துதுவளை சூப் – மழைக்காலங்களில் சளி, இருமல், காய்ச்சலை தடுக்கும். நோய் தடுப்பாற்றல் இதில் உள்ளதால், நுரையீரலின் பாதுகாப்பு கவசமாக செயல்படும்.
4. வேப்பம் பூ ரசம் – வயிறு, குடல் பகுதிகளில் உள்ள பூச்சிகளை அழித்து உணவு மண்டலத்தை ஆரோக்கியமாக வைக்கும்.
5. ஆவாரைக் கசாயம் – சர்க்கரை நோயாளிகள் தினமும் பருக வேண்டியது.
6. நிலவேம்பு கசாயம் – டெங்கு காய்ச்சலுக்கு மருந்து.
7. கொள்ளு ரசம் – உடல் எடையை குறைக்க உதவும்.

– நன்றி
(புதிய தலைமுறை)

# 1 யோசுவா

ஹாய் செல்லங்களா! எப்படி இருக்கீங்க எல்லாரும் சமத்தா, ஆண்டவருக்கும் அப்பா அம்மாவிற்கும் பிடித்த பிள்ளைங்களாக நன்றாக இருக்கிறீங்களா?

நாம் இந்த மாதம் சிறந்த தலைவனாக செயல்பட்ட யோசுவாவை பற்றி படிக்க போகிறோம், OK வா!

மோசேக்கு பிறகு, இஸ்ரவேல் மக்களை கானான் தேசத்துக்கு வழிநடத்த கர்த்தர் நியமித்த நபர் தான் யோசுவா. தேவன் மோசேயை கொண்டு செங்கடலை பிளந்து இஸ்ரவேலரை வழிநடத்தினது போல, யோசுவாவை கொண்டு யோர்தான் நதியை பிளந்து வழிநடத்தினார். யோசுவா தேவனுடைய பெலத்தினாலே, முப்பத்தியொரு நாடுகளையும் அவற்றின் ராஜாக்களையும் ஜெயித்தார். அவைகளில் ஒன்று எரிகோ. அதனுடைய கோட்டை சுவர் மிகவும் பிரமிக்கத் தக்கது. இஸ்ரவேலரை ஆறுநாள் ஒருமுறையும், ஏழாம் நாள் ஏழுமுறையும் சுற்றிவரச் சொன்னார். கடைசியில், ஜனங்கள் எரிகோவை வென்றனர்.



மற்றொன்று, ஆயி பட்டணம். மூவாயிரம் பேர் சென்று ஜெயிக்க வேண்டிய பட்டணத்தில், இஸ்ரவேலர், ஆகான் என்பவன் செய்த பாவத்தினால் தோற்றனர். ஆகான் திருடியதால் கல்லெறிந்து கொல்லப்பட்டான். மீண்டும் ஜனங்கள் ஆயி பட்டணத்தில் போர் தொடுத்து வென்றனர்.

இவ்வாறாக யோசுவா, தேவ பெலத்தினால் எல்லா பட்டணங்களையும் பிடித்தார். மேலும் தேவ உதவியினாலே பிடித்த பட்டணங்கள் அனைத்தையும் இஸ்ரவேலர் அனைவருக்கும் (லேவி கோத்திரத்தை தவிர) பங்கிட்டு கொடுத்தார்.

பின்னாளில் ஜனங்கள், தாங்கள் குடியேறின கானான் தேச மக்கள் செய்த

விக்கிர ஆராதனை செய்து தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தபோது, யோசுவா, இஸ்ரவேலரை கடிந்துக்கொண்டு உபதேசம் செய்தார். ஜனங்கள் மாறி கர்த்தரை சேவித்தார்கள்.

ஹாய் செல்லங்களா! சிறந்த தலைவன் என்பவன் வெளியில் இருக்கும் ராஜாக்களை ஜெயிப்பது மட்டுமல்ல, உள்ளே இருக்கும் மக்களையும் சரியாக வழிநடத்துவதாகும். யோசுவா செய்த அறிக்கையை நாம் இந்த மாதம் மனப்பாட வசனமாக படித்து, நம் வாழ்விலே அதனை செயல்படுத்துவோமா. OK படிங்க பார்க்கலாம்.

**மனன வசனம் :** யோசுவா 24:15

“நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்”!

– **பிரியா ஆண்டனி**

பாடம் **2**

# மோசே

அன்புள்ள குட்டீஸ்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்கள்! இன்னைக்கு நாம் மோசேயை பற்றி தெரிஞ்ச்சுகுவோமா? தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர்கள் “எகிப்து” என்ற நாட்டில் அடிமைகளாக மிகவும் துன்பத்தை அனுபவித்துகிட்டிருந்தாங்க அவர்களை காப்பாத்தி “ கானான்” என்கிற தேசத்தில் சந்தோஷமாக வாழவைக்கதான், தேவன் ‘‘மோசே’’ என்றவரை தெரிஞ்சிக்கிட்டார். இதைப்போலதான் நாம் ஒவ்வொருவரும் தேவனால தெரிஞ்சுகொள்ளப் பட்டிருக்கின்றோம். மோசே பிறந்ததே ஒரு கஷ்டமான சூழ்நிலையில்தான். ஆனாலும் தேவன், அவரை காப்பாத்தி தன்னுடைய ஜனங்களை வழிநடத்துறதுக்கு பயன்படுத்தினார்.



மோசேவால் அவ்வளவு சீக்கிரமாக இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்துவர முடியல. அவர் பார்வோன் என்ற எகிப்திய ராஜவோடு போராட வேண்டி இருந்தது. மோசேயும் தேவன்

கொடுத்த பொறுப்பை ஏற்றுக் கொள்ள பல காரணங்களை சொன்னார். ஜனங்கள் என்னை நம்பமாட்டார்கள், நான் திக்குவாயன், ராஜாவும் எகிப்தியரும் என்னை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று பல சாக்கு போக்குகளை சொன்னார். ஆனாலும் அப்படிப்பட்ட மோசேயை வைத்துதான், தேவன் 10 வாதைகளை எகிப்தியர் மேல் வரவைத்தார். செங்கடலை இரண்டாக பிரித்து இஸ்ரவேலர்களை கடக்க வைத்தார். அவர்கள் வனாந்திர வழியா காகனானுக்கு அழைச்சிகிட்டு பல அற்புதங்களை செய்தார்.

வனாந்தரம் (பாலைவனம்) வழியில் அவங்க போகையில், தேவன்மேல் பல குறைகளை சொன்னாங்க. அவரை திட்டவும் முறுமுறுக்கவும் செஞ்சாங்க தேவன் அவர்களுக்கு உடனே உடனே தண்டனையை கொடுத்தாலும், மோசே அவர்களுக்காக ஒவ்வொரு முறையும் தேவன்கிட்ட பரிந்து பேசுனாரு. அவங்க அப்படிப்பட்டவைகளை 40 வருஷமா செய்து தேவனையும் மோசேயும் வேதனைப்படுத்திகிட்டி மோசே 120 வருஷம் உயிரோடிருந்தான். அவன் பார்வையிலும் உடலிலும் எந்த குறையும் இல்லாமல் மரித்தான்.



பைபிளில் 'கிறிஸ்தவர்' என்ற வார்த்தை மூன்று முறை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் ஒவ்வொரு முறையும், குறிப்பாக, கிறிஸ்தவர்கள் என்று மட்டுமே கூறுகிறது.

குட்டீஸ்! புதிய ஏற்பாட்டில் மோசேயை பத்தி வசனம் இப்படியாக சொல்கிறது. "மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தான்'' என்பதாகும். அதனாலதான், தேவனே அவர் இறந்த பிறகு அடக்கம் பண்ணினார். மோசேயுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் எங்கே இருக்கிறது என்று யாருக்குமே தெரியாது. நாமும் மோசேயை போல தேவன் நம்மை எதுக்காக இந்த உலகத்தில் தெரிந்துகொண்டாரோ, அதற்காக உண்மையாய் இருப்போமா? அளவில்லாத ஆசீர்வாதம் பெற்றுக் கொள்வோமா?

**மனன வசனம் :** நீதி 18:20


"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்"

**- குயினி பிலேமோன்**

# 3 கிதியோன்

அன்புள்ள குட்டீஸ் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினலே உங்களுக்கு ஸ்தோத்திரம் எல்லாரும் நல்லா இருக்கீங்களா? உங்க எல்லாருக்காகவும் நாங்க தினமும் ஜெபிக்கிறோம்.

இந்த மாதம் கிதியோன் பத்தி நான் உங்களுக்கு சொல்ல போறேன். சொல்ல இவர் ஒரு “தீர்க்கதரிசி” மற்றும் நியாயதிபதி'' இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையை அவர்கள் கேட்கவில்லை, கீழ்படியவில்லை. அப்ப கர்த்தர் அவங்க மேல ரொம்ப கோபபட்டு ஏழு வருஷம் மீதியானியர்கள் கையிலே ஒப்புக்கொடுத்துடாரு, இந்த மீதியானியர்கள் இஸ்ரவேல் தேவனுடைய மக்கள் பிள்ளைகளாகிய ரொம்ப கஷ்டப்படுத்தினாங்க அவங்களுடைய வயல் விளைச்சலை கெடுத்து அவர்களின் ஆடு, மாடுகளை கூட விட்டுவிடல எல்லாதையும்



அழிச்சுபோட்டாங்க தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மளும் அவருடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் இருந்தால் மற்றவர்கள் நமக்கு கஷ்டம் கொடுக்க தேவன் அனுமதித்துவிடுவார்.

இஸ்ரவேல் மக்கள் மீயானியரின் கொடுமைகள் தாய்காம கர்த்தரிடத்தில் முறையிட்டாங்க அப்ப கர்த்தர் இந்த கிதியோன் என்பவரை அவர்களுக்காக அனுப்பிச்சு அவங்களை வழிநடத்த வைத்தார். இந்த கிதியோன் இஸ்ரவேல் மக்களிடம் போய் நீங்க தேவனுக்கு பயப்பட வேண்டும். அவர் சொல்வதை காது கொடுத்து கேட்க வேண்டும். நீங்க மற்றவர்களுடைய தேவர்களுக்கு பயப்பட வேண்டாம் என்று அவர்களுக்கு கர்த்தர் சொல்ல சொன்னதை சொன்னான். பிறகு கர்த்தருடைய தூதன் கிதியோனிடம் வந்து பராக்கரமசாலயே கர்த்தர் உன்னோடே இருக்கிறார். நீ போ என்றார். அப்ப கிதியோன் கர்த்தர் எங்களோடே இருந்தால் ஏன் எங்களுக்கு இது எல்லாம் நடக்குது என்றான். அப்ப கர்ததர் சொன்னாரு உனக்கு இருக்கிற பலத்தோடே போ. நீ இஸ்ரவேலர்கள் மீதியானியரினிடத்திலிருந்து (இரட்சிப்பு) காப்பாத்துவது சொன்னாரு. அப்ப அவன் சொன்னான் என்னோட குடுமங்பம் ரொம்ப எளியது நான் என்னோட வீட்டிலே ரொம்ப சின்னவன்

என்னால எப்படி முடியும்? என்றான். அப்ப கர்த்தர் நான் உன்னோட கூட இருப்பேன் ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ உன்னுடைய எதிரிகளை (மீதியானர்கள்) முறி அடிப்பாய் என்றார். கிதியோன் கர்த்தருடைய வார்த்தைகளை நம்பி ஏற்றுக்கொண்டு அவருடைய தூதனை தன்னுடைய தன் கண்களால் கண்டு அவருடைய (கர்த்தருடைய) வல்லமையினாலே இஸ்ரவேல் மக்களை காப்பாத்தினான்.

பிள்ளைகளா, நம்மளும் கர்த்தருக்கு பயந்து அவருடைய வார்த்தைகளை கேட்டு நடக்கனும் நம்ம சிறியவர்களா இருந்தாலும் நம்மள படைத்த ஆண்டவர் பெரியவர் அவரை மட்டும் நம்பி இந்த உலகத்துல வாழ்ந்த கிதியோனோடே அன்று இருந்த தேவன் இப்ப நம்மாளோடும் இருப்பார். நம்மை உலகத்ததுல அவருடைய பிள்ளைகளாய் வாழ வைப்பார்.

- P. **பெவர்லி கிங்ஸ்லிராஜா**

# ஏன் சிலர் கிறிஸ்தவராக இல்லை

## Why Some Are Not Christians

சிலர் தாங்கள் கிறிஸ்தவராகததற்கு "காரணங்கள்" என்று சிலவற்றைக் கூறலாம். ஆனால், கீழே உள்ள வசனங்கள் ஒவ்வொன்றையும் படித்துப் பார்த்தப் பின், நீங்கள் அதை "சாக்குப்போக்கு" என்று கூற விரும்புவீர்கள்.

- சிலர், தங்களுடைய பாவ நிலையைக் குறித்து உணர்வற்றிருக்கிறார்கள்.

  –ரோமர் 3:23; யோவான் 1:10; யோவான் 8:21

- சிலர், மீண்டும் பிறப்பதின் (ஞானஸ்நானம்) அவசியத்தை காண்பதில்லை.

  –ரோமர் 1:16; 2 தெச 1:89; யோ 3:3-5

- சிலர் பைபிள் சத்தியங்களைக் குறித்து கவலையற்றிருக்கிறார்கள்.

  – 2 தீமோ 3:16,17

- சிலர், தாங்கள் தாக்குபிடிக்க முடியாது என எண்ணி, அதினால் அவர்கள் முயலுவதில்லை. – 1 கொரி 10:1

- சிலர், தொழில்முறை கிறிஸ்தவர்களின் தீமையைக் கண்டு எதிர்மறையாக பாதிக்கப்படுகின்றனர். – மத் 18:6; 1 கொரி 9:12

- சிலர், உலகத்தையும் அதிலுள்ள நன்மைகளையும் நேசிக்கின்றனர்.

  – 1 யோ 2:15-17; யோ 12:42,43; 2 தீமோ 3:4

- Selected



## இம்மாதக் கேள்விகள்

1. மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் எப்படி எண்ண வேண்டும்?
2. அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும். அது எது?
3. சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னே தணிய வேண்டியது எது?
4. கர்த்தர் நம் இருதயத்தை எப்பொழுது ஸ்திரப்படுத்துவார்?
5. நாம் மற்றவர்களை, யாரைப் போல மன்னிக்க வேண்டும் என்கிறார் பவுல்?
6. இயேசு, ஏன் சந்திரரோகமுடையவனை சீடர்களால் குணப்படுத்த முடியவில்லை என்றார்?
7. ஒருவர் எப்பொழுது கிறிஸ்துவை தரித்துக்கொள்வதாக பவுல் கூறுகிறார்?
8. தேவனுடைய கையில் நன்மையை பெற்ற நாம் .......
9. ‘போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்’ என்றது யார்?
10. ஆலோசனை கேட்கிறவர்களிடத்தில் என்ன உண்டு?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-12-2013**

## சிறுவர்க்கான கேள்விகள்



1. எகிப்து நாட்டில் துன்பம் அனுபவித்த இஸ்ரவேலர்களை தேவன் எந்த நாட்டிற்கு அழைத்த சென்றார்?
2. மோசேயினுடைய குணம் என்ன?
3. செங்கடலை இரண்டாக பிளந்தது போல, தேவன் இரண்டாக பிரித்த நதி எது?
4. கோட்டை சுவரால் நிறைந்த பட்டணம் எது?
5. யோசுவாவின் விசுவாச அறிக்கை என்ன?
6. மீதியானியரிடமிருந்து இஸ்ரவேலரை காப்பாற்ற யாரை தேவன் அனுப்பினார்?
7. இஸ்ரவேலர் துன்பம் வந்த போது செய்தது என்ன?
8. உனக்கோ, உன்னை சார்ந்தவர்களுக்கோ துன்பம் வந்தால் நீ என்ன செய்வாய்?



**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-12-2013**

அனுப்ப வேண்டிய முகவரி :

சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி

மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத பதில்கள்

| | |
|---|---|
| 1. எபி 4:12 | 6. 1 கொரி 11:27 |
| 2. ஏசா 55:11 | 7. எபி 4:13 |
| 3. நீதி 18:14 | 8. எபே 4:3 |
| 4. யோபு 6:2 | 9. 1 கொரி 5:7 |
| 5. மத் 13:22 | 10. யாக் 1:22 |

## அக்டோபர் மாதம் சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. ரோஸ் மேரி – சென்னை
2. I. ஷீபா பிரியதர்சினி – சிவகங்கை
3. D. ஜோசுவா – பெங்களூர்
4. P. சௌந்தர் பாண்டி – திருமங்கலம்
5. M. அரவிந்த் – கோவை
6. R. சேம் – உக்கிரங்கோட்டை
7. V. ஷைனி – மதுரை
8. V. ஷாலி – மதுரை
9. R. மெர்ஸி– இஞ்சம்பாக்கம்
10. R. சாமுவேல் இன்பராஜ் – இஞ்சம்பாக்கம்

## அக்டோபர் மாதம் பதில் எழுதியவர்கள்

1. Mrs. மேரி ராஜ் – மதுரை
2. J. வித்வ சிரோன்மணி – மதுரை
3. Mrs. ஞான சிரோன்மணி – மதுரை
4. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
5. Mrs. ரூபி ஜெயராஜ் – மதுரை
6. Mrs. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
7. S.M. தவமணி தேவி – திருப்பூர்
8. A. ரோஸ் மேரி – சென்னை
9. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
10. Mrs. லாரா ரத்னராஜ் – தூத்துக்குடி
11. R. பால் ஜெயராஜ் – சென்னை
12. G. சிந்தனைமலர் ரவீந்தர் – ஆம்பூர்
13. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
14. Mrs. ஹெப்ஸி தாமஸ் – தூத்துக்குடி
15. G. மல்லிகா – மதுரை
16. S. ஜெயராஜ் – கோவை
17. Mrs. ஞானசுந்தரி – கோவை
18. Mrs. லிசி ராஜசேகரி – மறைமலைநகர்
19. Mrs. ஷீலா ரிச்சர்ட் தாஸ் – கொளத்தூர்
20. I. அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
21. Mrs. மேரி ராஜ் – மதுரை
22. Mrs. டெய்சி தர்மராஜ் – புதுக்கோட்டை
23. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
24. J. ஜோசப் – கோவில்பட்டி
25. E. கார்த்திக் ராஜா – யா. ஒத்தக்கடை
26. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
27. P. கலைச்செல்வி – யா. ஒத்தக்கடை
28. A. கௌசல்யா – யா. ஒத்தக்கடை
29. V. மெர்சி – செட்டிபாளையம்
30. P. மெர்சி வில்சன் – செட்டிபாளையம்
31. V. ராணி – செட்டிபாளையம்
32. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை
33. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
34. Mrs. ஹெலன் திலக் – மதுரை
35. Mrs. ரேச்சல் ஜீவகாந்தி – சேலம்
36. N. குணசுந்தரி நாகராஜன் – கீழப்பாவூர்
37. Mrs. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
38. J. விஜய் – வளர்நகர்
39. Mrs. பாக்கியரூபி விஜய் - வளர்நகர்
40. ஷோபன ஸ்டெல்லா – பெங்களூர்
41. Mrs. இந்திரா மங்கள்ராஜ் – கோவை
42. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்
43. P. சூரிய பிரியா – திருமங்கலம்
44. Mrs. சரோஜா – தென்கலம்
45. Y. ஜெயசுதா தேவசகாயம் – சென்னை
46. Mrs. மெர்ஸிரூபஸ் – சேலம்
47. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
48. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
49. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
50. Mr. பால் ஜெயராஜ் – சென்னை
51. ஜெமி நல்லையா – மதுரை

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

பிரியமானவர்களே! நீங்கள், ஒரு மாதம் முழுவதும் தேவனுடன் இணைந்திருக்க, அவர் பாதத்தில் அமர்ந்திருக்க இதோ ஓர் எளிய முயற்சி! இப்புத்தகம் உங்கள் கையில் கிடைக்கும் நாளில் இருந்து உங்கள் 'தின தியானத்தை' இந்த அட்டவணையின் உதவியுடன் துவங்குங்கள். ஒவ்வொரு நாளும் உங்கள் தின தியானத்தை முடித்தவுடன் 'கட்டத்தில்' டிக் செய்யவும். குடும்பமாக அமர்ந்து, கேள்வி கேட்டு, இப்பகுதியை தியானம் செய்து பயன்படுத்தவும். வெளி 1:3ன்படி தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்!

## தின தியானம்

| நாள் | வாசிப்பு பகுதி | மனன வசனம் | தியான தலைப்பு | குறிப்பு வசனங்கள் | டிக் |
|---|---|---|---|---|---|
| 1. | சங்கீதம் 33 | சங் 33:20-21 | காத்திரு | ஆதி 49:18, சங் 5:3, 27:14, 31:24, 37:7, 34, 84:10, 130:6, 147:1, நீதி 20:22 | ☐ |
| 2. | ரூத் 4:13-22 | 1கொரி 15:10 | இது என்ன? | சங் 127:1, 1கொரி 15:58, நீதி 10:16 | ☐ |
| 3. | உபா 6:4-9 | உபா 6:6,7 | தேவனால் காக்க முடியும் | நீதி 22:6, நீதி 23:13, எபே 6:4, கொலோ 3:21 | ☐ |
| 4. | யாத் 2 | கொலோ 1:13 | நமது தேவனுடைய மீட்பு | மாற் 10:45, அப் 20:28, 1பேதுரு 1:18, தீத்து 2:14 | ☐ |
| 5. | யாத் 6:28-7:3 | யாத் 7:1 | தீர்க்கதரிசி மோசே | யாத் 2:1-10, அப் 7:20-22, எபி 12:23-24 உபா 18:18 | ☐ |
| 6. | யாத் 14:21-31 | யாத்15:11 | தேவனை தேடு | உபா 4:29, 2நாளா 7:14, 2நாளா 15:2, மத் 6:33 | ☐ |
| 7. | உபா 7:5-15 | உபா 7:2 | ஆவிக்குரிய உறவு | 2 கொரி 6:14-18 | ☐ |
| 8. | உபா 8:11-20 | 1தீமோ 6:18 | வாழ்க்கை நன்றாக இருக்கிறது என்றால் என்ன? | யாக் 1:27, மத் 6:3, கலா 6:2,9-10 | ☐ |
| 9. | யோசுவா 24:6-15 | உபா 5:7 | தலைவர் யார்? | யாத் 20:2-6, யோவான் 4:23-24 | ☐ |
| 10. | யோசுவா 24:14-24 | சங் 46:10 | கவனம் செலுத்தவும் | சங் 62:1, யாத் 14:13, எண் 9:8, எபி 2:2 | ☐ |
| 11. | நியாயாதிபதி 2:1-10 | ஆதி 17:7 | ஒரு போதும் தெரியாது என்று சொல்லாதே | ரோமர் 1:19-20, சங் : 14 | ☐ |
| 12. | 2 சாமு 9:1-10 | உபா 31:8 | விசுவாசத்திற்கு எதிர் பயம் | ஆதி 15:1, 26:24 எண் 21:34, ஏசாயா 41:10 | ☐ |
| 13. | 1 ராஜா 8:56-61 | நீதி 27:19 | புகைப்படங்கள் | மத் 12:35, 15:19-20 பிலி 2:20, 2கொரி 8:3 | ☐ |
| 14. | ரூத் 2:1-9 | பிலி 4:13 | கர்த்தருடன் நமது ஐக்கியம் | 1 யோவான் 1:3-7 | ☐ |

இப்பக்கத்தை கத்தரித்து எடுத்து உங்கள் பைபிளில் வைத்துக்கொள்ளவும்.

| நாள் | வாசிப்பு பகுதி | மனன வசனம் | தியான தலைப்பு | குறிப்பு வசனங்கள் | டிக் |
|---|---|---|---|---|---|
| 15. | எஸ்தர் 9:20-32 | 1யோவான் 4:11 | துன்பத்திலிருந்து மகிழ்ச்சி | யோவான் 16:20, மத் 5:4 | ☐ |
| 16. | யோபு 1:13-22 | அப் 16:25 | கடைசி குறியில் முயற்சி | சங் 23:5, தானி 3:17-18 சங் 119:110 | ☐ |
| 17. | சங் 3:1-8 | சங் 3:3 | தேவனே ! என்னை பாரும். | சங் 4:1 ; 5:1 ; சங் 6:3-9 | ☐ |
| 18. | சங் 4 | 1பேதுரு 1:23 | மகிழ்ச்சி | 1 நாளா 16:10, 16:27 நெகே 8:10, சங் 20:5 | ☐ |
| 19. | சங் 8:1-9 | எரே 31:35 | நட்சத்திர வியப்புகள் | ஆதி 1:16, 15:5 எண் 24:17, யோபு 9:9, 22:12 | ☐ |
| 20. | சங் 19:1-9 | சங் 19:1 | என்ன ஒரு அழகான வானம் | ஆதி 1:8, 18; சங் 103:11; ஏசாயா 66:1; மத் 3:16; 2 கொரி 12:2 | ☐ |
| 21. | சங் 23 | பிலி 4:6 | ஜெபம் ! மனஅழுத்தத்தை குறைக்கிறது | 1சாமு 1:1-18 | ☐ |
| 22. | சங் 33:1-8 | சங் 5:11 | மகிழ்ச்சியான மக்கள் | 2 சாமு 6:12, நாளா 12:40 எஸ்றா 6:22, நெகே 12:43 | ☐ |
| 23. | சங் 46 | சங் 46:1-2 | தேவன் நம்முடைய பெலனாயிருக்கிறார் | ஏசா 7:10, 2நாளா 20:12 சங் 6:2, 27:1, 52:7 | ☐ |
| 24. | சங் 56:1-3 | வெளி 2:10 | விசுவாசமா அல்லது பயமா? | மத் 14:25-34 | ☐ |
| 25. | சங் 66:1-7 | 1 சாமு 15:22 | கீழ்படிவது போல் நடித்தவன் | லூக்கா 6:46, மத் 25:18, 24-30 மத் 21:28-31 | ☐ |
| 26. | சங் 69:29-36 | 1பேதுரு 5:6-7 | விழுந்துவிடாதே ! | 2பேதுரு 1:5-10 எபி 3:7-19 | ☐ |
| 27. | சங் 95:1-7 | சங் 95:6 | தேவனை தொழுதுகொள்ளுதல் | யோவான் 4:23,24, மத் 4:10 | ☐ |
| 28. | சங் 95:1-7 | வெளி 4:11 | உச்சமான ஆக்கிறதுடைய மேதை | ஆதி 17:1; 35:11; யாத் 6:3 யோபு 22:23; 24:1 | ☐ |
| 29. | சங் 119:105-112 | சங் 109:105 | ஒரே வழி | யோவான் 14:6; 10:9-10 | ☐ |
| 30. | சங் 144:1-10 | செப் 3:17 | இரவில் ஒரு பாடல் | அப் 16:23-33 | ☐ |



SEEKERS
Bible Study Course
The Church of the Bible
கிருபையின் கீதங்கள்
SONGS OF GRACE
உங்களுக்கான பிரசங்கக் குறிப்புகள்
Sermon Outlines Just for You
"புதிய வெளியீடு"
கிருபையின் கீதம் பாடல் புத்தகம்
– 333 பக்கங்கள்
– 444 தமிழ் பாடல்கள்
மற்றும்
Choruses & English Songs
(With Hard Sound Wrapper)
உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகளும் பல்வேறு தலைப்புகளில் கிடைக்கும்

# அக்டோபர் மாத ஊழியங்கள்





குன்னூரில் FIRST PRINCIPLES
ஆங்கிலப் புத்தகம் வெளியீட்டின் போது...

நமது கிருபையுள்ள வார்த்தையின் மூலம்
உதகையில் வெளியிடப்பட்ட
புதிய "கிருபையின் கீதங்கள்" பாடல் புத்தகம்





உதகை மாவட்டம் குன்னூரில் நடைபெற்ற JC SCHOOL OF EVANGELISM
சிறப்பு வகுப்பில் சகோ. JERRY BATES மற்றும் நமது ஆசிரியர்.





குன்னூர் ஊழிய பயிற்சி வகுப்பின் போது மொழியாக்கம் செய்த சகோ. கின்ஸ்லி மற்றும் சகோ. வேமியன்







ஆந்திர மாநிலம் பிரபக்குடாவில் நமது ஊழிய
பயிற்சி மாணவர்கள் திருமுழுக்கு பெற்றவர்கள்.

மதுரையில் திருமுழுக்கு பெற்ற
பார்வையற்ற சகோதரி